Sri C. H. Kanaran :—" On a point of personal explanation, Sir. While putting my supplementary question, I stated the real facts, but the Hon. Minister denies them. Will the Hon. Minister make an enquiry into the matter? "

Mr. Speaker :—" This is another way of putting questions. The Hon. Member wanted to say something by way of personal explanation. Now he is putting a question." (Laughter.)

Co-operatives for Cottage Industries

* 1626 *Q.*—Sri N. K. Palanisamy : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre to start small-scale and cottage industries co-operatives to organize production and marketing of finished products;

(*b*) if so, the number of co-operatives that are to be set up; and

(*c*) the places where they are to be established?

The Hon. Sri M. Bhaktavatsalam :—" (*a*) Yes, Sir; the Government of India have suggested that industrial co-operatives may be organized for certain small-scale industries such as carpentry, blacksmithy, leather tanning and pottery.

" (*b*) & (*c*) The number of industrial co-operatives to be set up has not been fixed and the places where they are to be established have not been decided. The Government have already sanctioned the conversion of two handloom weaving factories at Chowa and Tottada in Malabar district into handloom co-operatives. More industrial co-operatives will be set up as and when the necessity arises."

Sri N. K. Palanisamy :—" குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கையாக இருக்கிறதென்று சொல்லும்போது, குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இந்த ராஜ்பத்தில் ' மார்க்கெட் ' செய்வதற்கு ஏற்பாடு செய்வது மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ? "

The Hon. Sri M. Bhaktavatsalam :—" இதுபற்றி எல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டுதானிருக்கிறது."

Sri M. Kalyanasundaram :—" May I know, Sir, what special facilities have been proposed to be given to these industrial co-operatives? "

The Hon. Sri M. Bhaktavatsalam :—" Sir, I may mention one special facility, viz., that the workers can be members of these co-operatives and they will have to contribute the share capital which will be advanced by the Government as a loan repayable in instalments."

26th March 1955]

Sri V. MUTHU :—" கிராமங்களில் பெரும்பாலும் ஹரிஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மலைப்புறங்களில் இயற்கையாக வளர்ந்துள்ள கொடிகளைக்கொண்டு கூடை முடைதல்போன்ற சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களால் மூலதனம் போட்டு தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு முடியாமலிருக்கிறது. அவர்கள் குடிசைத்தொழில்களின்மூலம் உற்பத்தி செய்யும் பொருள்கள்கூட 'மார்க்கெட்' களில் விலை ஆகாமல் பெரும்பாலும் தேங்கிக்கிடக்கின்றன. தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் விலையாகாமலிருப்பதால் சிறு கைத்தொழில்களில் மேலும் ஈடுபடமுடியாமலிருப்பதோடுகூட, தங்களுடைய குடும்பத்தை சம்ரட்சிக்கமுடியாமல் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஹரிஜனங்கள் செய்யும் சிறு கைத்தொழில் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை உடனுக்குடன் விற்பனை செய்வதற்கும், அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மூலதனம் போடுவதற்கும் இம்மாதிரி கூட்டுறவு இயக்கம் உதவியாக இருக்குமா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" அதுவேதான் சர்க்காருடைய நோக்கமும். ஆனால் எவ்வளவு தூரம் சாத்தியப்படுகிறதோ அந்த அளவுக்கு இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தும்."

Sri S. C. C. ANTHONY PILLAI :—" Sir, for the last seven years we have been talking of this problem of industrial co-operatives. It means essentially the organizing of raw materials and the organizing of a market. Mere pious hopes will not do. Will the Government set up an Expert Committee to go into these questions for the purpose of encouraging such co-operatives? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" Sir, if we have been talking all along, it means we are talking first before we do anything. We do talk here and are taking action. That is how we have been attending to the matter. I may assure the hon. Member that Government will take all the steps necessary and will also consider the valuable suggestion of appointing an Expert Committee for the purpose of effectively organizing some of these small industries."

Sri N. C. RAMASAMY KANDER :—" காடுகளிலிருந்து கிடைக்கும் மூங்கில் போன்ற பொருள்களைக் கொண்டு குடிசைத் தொழிலின் மூலம் முறம், படல் போன்ற சாமான்களை கிராமத்திலுள்ள ஜனங்கள் செய்கிறார்கள். குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்கள் தேங்கிக் கிடக்காமல், அவைகள் அவ்வப்போது விற்பனை ஆவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" Sir, I am glad to find that the hon. Member is taking such a lively interest in this important subject. If he could further extend his support and give us specific suggestions and help in organizing industrial co-operatives, I can assure the hon. Member that the Government are equally anxious that they should do something effectively."

Sri V. R. NAGARAJAN :—" Sir, arising out of the answer given in reply to the question of the hon. Member Sri V. Muthu, may I ask whether there is any proposal to encourage the production of dummy horses under small-scale and cottage industries? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" I am not very much interested in that."

SRI D. KRISHNAMURTHI GOUNDER :—" மற்ற நாடுகளில் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்ந்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்துவருகிறோம். ஆனால், இங்கு அவ்வாறு இல்லை. நம் நாட்டில் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை சர்க்கார் எடுப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" குடிசைக் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதே சாதாரண பொதுமக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத்தான்."

9-10 a.m. SRI T. S. ARDHANARI :—" கூட்டுறவு முறையில் சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் அதற்குத் தொழிலாளிகள் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும், சர்க்கார் எவ்வளவு பணம் கொடுக்கும் என்பதை மந்திரி அவர்கள் விளக்குவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" யார் எவ்வளவு பணம கொடுக்கவேண்டும் என்பது ஆரம்பிக்க உத்தேசிக்கப்படும் தொழிலையும், அந்தத் தொழிலுக்கு வேண்டிய முதலீட்டையும் பொறுத்திருக்கிறது."

SRI S. VADIVELU :—" கிராமங்களில் பாய் முடைதல், வலை பின்னுதல், கயிறு திரித்தல் போன்ற குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் மூலதனம் கொடுப்பதன் மூலம் கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியும். அம்மாதிரி செய்ய சர்க்கார் முன்வருவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதையெல்லாம் தான் சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறது."

SRI S. PANCHAKSHARAM :—" The scheme to advance loans for the purpose of share capital to these industrial co-operatives is no doubt good so far as it goes. But these industrial co-operatives find it difficult to maintain themselves during the early stages on account of losses incurred. Will the Government come to the aid of these industrial co-operatives by offering them subsidies whenever losses are incurred? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I may tell the hon. Member that we should not anticipate too many difficulties in the matter even before starting these industrial co-operatives."

SRI M. P. SUBRAMANYAM :—" இண்டஸ்ட்ரியல் கூட்டுறவு திட்டத்தின் கீழ் ஷேர் காபிடல் கொடுப்பதைத் தவிர வேறு எந்த வித உபகாரம் குடிசைத் தொழில் பொருள்களுக்குக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் அவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு இன்னும் என்னென்ன வித யோசனைகளை அளிக்கிறாரோ அவைகளையெல்லாம் கவனித்து அவைகளையும் அதில் சேர்த்துக்கொள்ளலாம்."

SRI S. DAIVASIGAMONEY :—" While encouraging the development of small-scale and cottage industries, will the Government restrict the growth of large-scale industries which manufacture the same kind of goods produced by small-scale and cottage industries or allow large-scale industries to develop so that they may keep themselves abreast of the time? "

26th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I may tell the hon. Member that generally there will be no conflict between small-scale industries and large-scale industries in which we are interested."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் மந்திரி அவர்கள் அங்கத்தினர்களுடைய யோசனைகளை வரவேற்பதைக் கண்டு நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் யோசனைகளைக் கொடுக்க அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பாரா ? தோல் பதனிடும் தொழிலை இண்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் சொசைடி மூலமாக ஆரம்பிப்பதாகச் சொன்னார். அதை ஆரம்பிப்பதற்கு மூலதனம் கடனாகக் கொடுத்தால்மட்டும் போதாது. தோல் கிடங்குகள், கட்டடங்கள் முதலியவைகளை சொசைடியின் மூலமாகக் கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"தோல் பதனிடும் தொழிலுக்கு கட்டடம் கட்டுவதைப்பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்களுக்கு எந்தெந்த முக்கியமான தொழில்களில் அக்கரையும் அனுபவமும் எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவைகளிலெல்லாம் உறுப்படியான யோசனைகள் அவர்கள் சொல்லக்கூடும். அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு அதனால் அரசாங்கம் பலனடையலாம்."

SRI M. NARAYANA KURUP :—" Have the Government finalized a complete blue print of the model bye-laws for industrial co-operatives? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" No, Sir."

SRI S. RAMALINGAM :—" தமிழ் நாட்டில் பீடி, சுருட்டு இந்த இரண்டு தொழில்களும்தான் முக்கியமாக குடிசைத் தொழிலாக நடந்து வருகின்றன. அந்தத் தொழில்களில் வேலை செய்து கொண்டு வரும் தொழிலாளர்கள் ரொம்பவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இண்டஸ்ட்ரியல் கூட்டுறவு திட்டம் அபிவிருத்தி அடையும்படிச் செய்ய சர்க்கார் யோசிக்குமா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அங்கத்தினர்களுக்கு எந்த அளவில் அனுபவம் இருந்து எப்படி அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்களோ அதையெல்லாம் கவனிக்கப்படும்."

SRI S. SWAYAMPRAKASAM :—" From the answers given to supplementary questions put by hon. Members, it has to be inferred that the Government have not fully considered how best we can help starting small-scale and cottage industries. May I suggest to the Government that, in the matter of development of these cottage and small-scale industries, we may divide these industries into two groups, one group relating to industries producing goods which find a ready market and the other group relating to industries producing goods which do not find a market easily. Will the Government examine the matter in that way and undertake to find out which of the cottage and small-scale industries can be developed? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Yes, Sir. The Government will certainly do it. I may tell the hon. Member that the Government have not yet finalized any scheme.

I once again appeal to the hon. Members who are taking so much interest to think about this matter, formulate specific schemes and send them to Government and they will certainly examine them.''

SRI P. G. MANICKAM :—" சென்னை மாகாணத்தில் அநேக இடங்களில் ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு சொசைடிகள் இருக்கின்றன. அந்த சொசைடிகளை இண்டஸ்ட்ரியல் சொசைடியின் கீழ் மாற்றி அதன் மூலம் ஹரிஜனங்களுக்கு தொழில் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' அவருடைய யோசனைகளையெல்லாம் கவனிக்கிறேன். ஆனால் எல்லா குடிசைத் தொழில்களையும் கூட்டுறவு சொசைடிகள் மூலமாகத்தான் நடத்த வேண்டும் என்பது அவசியம் இல்லை."

SRI S. THINAKARASAMI THEVAR :—" இம்மாதிரியான கைத்தொழில்கள் கள்ளர் சீர்திருத்த இலாகாவால் பல வருஷங்களாக நடத்தப்பட்டு வந்து இப்பொழுது திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டன. திரும்பவும் சிறு கைத்தொழில்களை அதே இலாகாவின் மேல்பார்வையில் கூட்டுறவு சொசைடி மூலமாக ஆரம்பித்து நடத்த சர்க்கார் முன் வருமா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' சிறு கைத் தொழில்கள் வெற்றி அடையவில்லை. அதற்குக் காரணம் என்ன, அவைகள் வெற்றிகரமாக நடைபெற என்ன வழி என்பதை யெல்லாம் யோசிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை யெல்லாம் யோசித்து, புனராலோசனை செய்து அவைகளை மீண்டும் எப்படி அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்."

MR. SPEAKER :—'' I have got only 15 minutes more and I have to finish the rest of the questions within that time.''

Harijan hostels

* 1627 *Q*.—SRI S. VADIVELU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of Harijan hostels in the State at present; and

(*b*) how many of them are run by the Government?

THE HON. SRI B. PARAMESWARAN :—'' (*a*) Two hundred and thirty-three hostels.

'' (*b*) Twenty-three are Government hostels.''

SRI S. RAMALINGAM :—" சுமார் 210 ஆஸ்டல்கள் தனிப் பட்டவர்களால் நடத்தப்பட்டன. பல ஆஸ்டல்கள் ஒழுங்கான முறையில் நடக்கவில்லை என்று சர்க்காருக்கு அங்கத்தினர்கள் பல முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆஸ்டல் நடை முறைகளை விசாரணை செய்வதற்கும், ஆஸ்டல்களுக்குக் கொடுக்கப்படும் பணம் போதுமா, அங்கு மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு போஷாக்கு உள்ளதாக இருக்கிறதா, அவர்களுக்கு உணவு சரியாக கொடுக்கப்படுகிறதா என்பதை விசாரணை செய்யவும் ஒரு கமிட்டியை ஏற்படுத்துவார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—'' இதைப் பற்றி நான் என்னுடைய பட்ஜெட் பேச்சில் சொல்லியிருக்கிறேன். எங்கு குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்கவும், அவற்றை நிவர்த்தி